புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# காப்பிய இலக்கியத்தில் திருநங்கைகள்

**ஆய்வாளர்**
**இ.ஜெயஸ்ரீ**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,*
*கொங்கு கலை அறிவியல் கல்லூரி, கரூர்.*
*(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)*

**நெறியாளர்**
*முனைவர் மா.சண்முகம்*
*உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,*
*கொங்கு கலை அறிவியல் கல்லூரி, கரூர்.*

## முன்னுரை

*பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனித இனம் தோன்றியது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. மனித இனம் தோன்றிய காலத்தே திருநங்கைகளும் தோன்றி விட்டனர். அவர்கள் எப்படி இருந்திருப்பார்கள்? அவர்களுடைய வரலாறு என்ன? என்பதை இலக்கியங்கியங்களின் வாயிலாக தெரிந்து கொள்ள முடிகிறது. மனித இனத்தின் வரலாற்றை கூறும் நம் இலக்கிய ஆதாரங்கள், திருநங்கைகளைப் பற்றியும் பதிவு செய்துள்ளன. அவற்றுள் காப்பியங்களில் இடம்பெற்றுள்ள திருநங்கைகளைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காணலாம். அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் கூறி, தன்னிகரில்லாத தலைவன், தலைவியையும் கொண்ட நீண்ட செய்யுட் பகுதி காப்பியமாகும். இவ்வாறு படைக்கப்பட்ட நெடுங்காப்பியங்களில் கூட திருநங்கையர் பற்றிய குறிப்புகள் நமக்கு கிடைக்கின்றன. திருநங்கைகள் அரண்மனைகளில் அரசியர்க்கு உதவியாகவும் அந்தப்புர பணியாளர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.*

## சிலம்பில் திருநங்கைகள்

*இளங்கோவடிகள், சிலம்பில், இந்திரவிழவூர் எடுத்த காதையில், புகார் நகரில் இருந்த வெள்ளிடை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், சதுக்கப்பூத மன்றம், பாவை மன்றம் என ஐந்து வகையான மன்றங்கள் குறித்துக் கூறியுள்ளார்.*

ஒவ்வொரு மன்றத்திலும் வழிபடக் கூடியவர்கள் மற்றும் வழிபடுவோர்க்கு ஏற்படும் பயன்கள் பற்றியும் அவர் விளக்கியுள்ளார்.

இவற்றில் இலஞ்சி மன்றம், உடல் குறைபாடு உடையவர்களுக்கு உரியதாகச் சுட்டப்படுகிறது. கூன் முதுகினர், குள்ளர், வாய்பேச இயலாதவர்கள், செவிடர், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இலஞ்சிமன்றப் பொய்கையில் முழுகி நீராடினால் நோயும் உடல் குறையும் நீங்கும் என்கிறார்.

கூனும் குறளும் ஊமும் செவிடும்
அழுகு மெய்யாளரும் முழுகினர் ஆடி
பழுதுஇல்காட்சி நல்நிறம் பெற்று
வலம்செய்யாக் கழியும் இலஞ்சி மன்றமும்.[1]

மேற்கூறிய பாடலின் மூலம் உடல் குறைபாடுடைய திருநங்கைகள் இலஞ்சி மன்றத்தை வழிபட்டிருக்கலாம் என்று கருத முடிகிறது.

**ஆடல்**

கடல் ஆடுகாதையில் ஆடல் வல்ல மாதவி தாளமுறைகெடாமல் கொடுகொட்டி ஆட்டம் முதற்கொண்டு பதினொரு வகை ஆடல்களை நிகழ்த்திக் காட்டுகிறாள். அதில் ஒரு வகைதான் பேடியாடல்.

ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி ஆடலும்.[2]

வாணாசுரன் நகரத்திலிருந்த தன் மகனாகிய அநிருத்தனைச் சிறை மீட்க ஆண்மை திரிந்த பெண் கோலத்துடன் காமன் ஆடிய கூத்தே பேடியாடல் எனப்படுகிறது. இவ்வரிகளின் மூலம் ஆண்மை திரிந்த பெண்மை உணர்வு மிக்கவர்கள் திருநங்கைகள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. இன்றும் சில கிராமப்புரங்களில் வேண்டுதலுக்காக பெண் வேடமிட்டு ஆடும் பழக்கம் தொடர்கிறது.

**தெய்வம்**

மதுரைக் காண்டத்தில், கட்டுரைக் காதையில் கண்ணகி மதுரையை எரித்தழித்த பிறகு, அவள் அறியும்படியாகத் தோன்றி, முன்னர் நடந்த முற்பிறவிக் கதையைக் கண்ணகிக்கு சொல்லும் தெய்வம் மதுராபதியாகும்.

வலமருங்கு பொன் நிறம் புரையும் மேனியள்
இடக்கை பொலம்பூந் தாமரை ஏந்தினும்
வலக்கை அம்சுடர்க் கொடுவாள் பிடித்தோள்
வலக்கால் புனைகழல் கட்டினும், இடக்கால்
தனிச்சிலம்பு அரற்றும் தகைமையள் பனித்துறைக்

கொற்கைக் கொண்கன், குமரித்துறைவன்,
பொன்கோட்டு வரம்பன், பொதியில் பொருப்பன்

*குலமுதல் கிழத்தி.*[3]

*மதுராபதி தெய்வம் இருபால் கூறுடையது. இடது கையில் தாமரை மலரும் வலது கையில் கொடுவாளும் வலது காலில் வீரக்கழலும் இடது காலில் ஒலி செய்யும் ஒற்றைச் சிலம்பும் அணிந்தவளாகக் காட்சித் தருகிறாள். இருபால் தன்மை கொண்ட மதுரை மாதெய்வம் திருநங்கையாகவே இருக்கிற செய்தியை நாம் அறிந்துகொள்ளலாம்.*

### பெண்ணின் அழகு

*இளங்கோவடிகள் பெண்ணின் அழகைக் கூறுமிடத்தில் திருநங்கையர் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.*

*ஆண்மையில் திரிந்துதன் அருந்தொழில் திரியாது*
*நாணுடைக் கோலத்து நகைமுகங் காட்டிப்*
*பண்மொழி நரம்பின் திவ்வியாழ் மிழற்றிப்*
*பெண்மையில் திரியும் பெற்றியும் உண்டென.*[4]

*தன்னுடைய ஆண் உருவை மாற்றிக் கொண்டாலும் கொல்லுதலாகிய தன் கொலைத் தொழிலை மாற்றிக் கொள்ளாது, வெட்கமும் சிரிப்பும் பொலியும் முகத்தோற்றத்தோடு, யாழிசைபோல இனியமொழி பேசிடும் பெண்ணுருக் கொண்டு இங்குத் திரிவதும் உண்டோ என்கிறார். மேற்கூறிய கருத்தினை நோக்கும்போது ஆண் தன்மையிலிருந்து திரிந்தவர்களாகவே இவர்களை சிலம்புக் கூறுகிறது. சேரனின் வீரத்தைச் சோழனும் பாண்டியனும் அறிய வேண்டும் என்பதை வலியுறுத்துமிடத்தில் திருநங்கையரைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. சேரன் செங்குட்டுவன் பத்தினித் தெய்வம் கண்ணகிக்குக் கல் எடுக்கவும் தமிழனின் வீரத்தை நிலை நாட்டிடவும் வடதிசை நாடுகள் மீது படையெடுத்துச் சென்று கனகவிசய மன்னர்களைத் தோற்கடித்து, இமயத்திலிருந்து கல்லெடுத்து, கங்கை ஆற்றில் நீர்ப்படை செய்து தென்திசை நோக்கித் திரும்புகிறான்.*

*சுருளிடு தாடி மருள்படு பூங்குழல்*
*அரிபரந்து ஒழுகிய செழுங்கயல் நெடுங்கண்*
*விரிவெண் தோட்டு வெண்ணகைத் துகர்வாய்ச்*
*சூடக வரிவளை ஆடமைப் பணைத்தோள்*
*வளரிள வனமுலை தளரியல் மின்னிடை*
*பாடகச் சீறடி ஆரியப் பேடியோடு.*[5]

*இப்பாடல் வரிகளில் பேடி என்றழைக்கப்படும் திருநங்கையரை அழகு மிளரும் இளம் பெண்ணைப் போன்று ஆசிரியர் வருணித்துள்ளார். கறுத்த கூந்தலையுடையவள்; செவ்வரிகளை கொண்ட பெரிய கெண்டைமீன் கண்களை உடையவள்; வெள;ளைப் பற்களையும் சிவந்த வாயையும் உடையவள்; மூங்கில் தோளும் அழகிய இள மார்பினையும் மின்னல் போன்ற இடையினையும் கொண்டவள்; பாடகம் என்னும் கால் அணி அணிந்தவர்கள் ஆரிய பேடிகள் என்று கூறியுள்ளார்.*

ஆசிரியர் இப்பாடலில் மட்டுமே திருநங்கைகளின் உடல்தோற்றம் பற்றி பதிவு செய்துள்ளார்.

**பணிப்பெண்களாக திருநங்கைகள்**

வஞ்சிக் காண்டம், நடுகற் காதையில் செங்குட்டுவனின் மனைவியும் அரசியுமான வேண்மாள், வெண்ணிலா காண நிலாமுற்றம் வருகிறாள்.

மன்மதச் சாந்தும் வரி வெண்சாந்தும்
கூனும் குறளும் கொண்டன ஒருசார்
வண்ணமும் சுண்ணமும் மலர்பூம் பிணையலும்
வெண்அணிப் பேடியர் ஏந்தினார் ஒருசார்.[6]

ஒளிவீசும் வளையல் அணிந்த பணிப்பெண்கள் மங்கல விளக்கை ஏந்தி வாழ்த்துகின்றனர். ஒருபக்கம் மத்தள ஒலியும் யாழிசையும் கொண்டு பண்ணமைத்துப் பாடும் பாடல் முழக்கம் ஒலித்துக்கொண்டிருக்கிறது. மறுபக்கம் கஸ்தூரிக் குழம்பையும் தொய்யில் எழுதும் வெண் சந்தனத்தையும் கூனரும் குள்ளரும் ஏந்தி நிற்கின்றனர். அதே வரிசையில் பெண்போல் அழகுடைய பேடிகள் சுண்ணப் பொடிகளையும் வாசனையுள்ள மலர் மாலைகளையும் தாங்கி நிற்கின்றனர் என்ற செய்தி நமக்கு கிடைக்கிறது. இதன் மூலம் திருநங்கைகள் அரண்மனை அந்தப்புரங்களில் அரசியர்க்குப் பணிவிடை செய்யும் பெண்களாக இருந்திட்ட வரலாற்றினை அறியமுடிகிறது.

**மணிமேகலை**

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் திருநங்கைகள் பற்றிய குறிப்புகள் நமக்கு கிடைக்கின்றன. மலர்வனம் புக்க காதையில் திருநங்கைகள் பற்றி பேசப்பட்டுள்ளது.

மணிமேகலை கலைதன் மதிமுகந் தன்னுள்
அணிதிகழ் நீலத் தாய் மலரோட்டிய
கடைமணி யுகுநீர் கண்டன னாயிற்
படையிட்டு நடுங்குங் காமன் பாவையை
ஆடவர் கண்டால் அகறலு முண்டோ
பேடிய றன்றோ பெற்றியின் நின்றிடின்.[7]

மணிமேகலை தனது தாய் தந்தைக்கு ஏற்பட்ட துயரைக் கேட்டு கண்ணீர் வடிக்கிறாள். மாதவி அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். மணிமேகலையின் மதிபோன்ற முகத்தில் வரும் உகுநீர் கண்டால் காமன் தனது படையினை எறிந்துவிட்டு நடுங்குவான் என்றும் அவளின் அழகைக் கண்டால் ஆடவர்கள் அவளைவிட்டு நீங்கிச் செல்லமாட்டார்கள் என்றும் கூறியுள்ளார். அப்படி நீங்கிச் செல்பவர்கள் பேடியர் ஆவர் என்று பதிவுசெய்துள்ளார். இங்கு பெண்களின் அழகு பற்றியும் பெண்தன்மை மிகுந்த பேடியர்களின் குணம் பற்றியும் கூறியுள்ளார்.

**பேடிக் கூத்து**

*மலர்வனம் புக்க காதையில் புகார் நகரத்தில் நிலமளந்த நெடுமாலின் மகனாகிய காமன் ஆடிய பேடிக்கூத்து நிகழ்த்தப்படுகிறது.*

*சூரியற் றாடி மருள்படு பூங்குழல்*
*பவளச் செவ்வாய்த் தவள வாள்நகை*
*ஒள்ளரி நெடுங்கண் வெள்ளிவெண் தோட்டுக்*
*கருங்கொடிப் புருவது மருங்குவளை பிறைநுதல்*
*காந்தளஞ் செங்கை ஏந்திள வனமுலை*
*அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்*
*இகந்த வட்டுடை எழுதுவரிக் கோலத்து*
*வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி*
*நீணில மளந்தோன் மகன் முன்னாடிய*
*பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்.*[8]

*சுருண்ட தாடியும் இருண்ட அழகிய கூந்தலும் பவளம் போன்ற சிவந்த வாயையும் வெண்மைமிக்க பற்களையும் ஒளிபொருந்திய பெரிய கண்களையும் சங்கினாற் செய்த காதணியையும் கருமையான வளைந்த புருவத்தின் பக்கத்தில் வளைந்துள்ள பிறை போன்ற நெற்றியையும் காந்தள் மலர் போன்ற சிவந்த கையையும் அழகிய நுண்ணிய இடையையும் முழங்காள் அளவாக உடுக்கப்படும் உடையும் அணிந்தவர்கள் பேடியர்கள் என்று திருநங்கைகளின் உருவ அமைப்பினை மணிமேகலை எடுத்துத்துரைக்கிறது.*

***சீவகசிந்தாமணி***

*திருத்தக்கத் தேவரால் இயற்றப்பெற்ற சீவகசிந்தாமணி காப்பியத்தில் காந்தருவதத்தையார் இலம்பகத்தில் திருநங்ககைள் பற்றிய குறிப்புகள் உள்ளன.*

*யாழிசையில் வல்ல காந்தருவதத்தை என்னும் மங்கைக்கு நெருங்கிய தோழியாக விளங்குவது வீணாபதி என்னும் திருநங்கையாகும். காந்தருவதத்தை பிற மன்னர்களோடு யாழிசையில் போட்டியிடும்போது மன்னர்களுக்குச் சவால் விடுபவள் வீணாபதியே. சீவகன் காந்தருவதத்தை மீது காதல் கொள்வதற்கும் அக்காதலின் பொருட்டுத் தூது செல்லும் பணியை மேற்கொள்வதும் வீணாபதியே. வீணாபதியைக் காந்தருவதத்தையின் உற்றதோழியாக திருதக்கதேவர் உயர்த்திப் படைத்துள்ள நுட்பம் போற்றுதற்குரியது. வீணாபதியின் அழகையும் மன்னர்கள் பேசும் மொழிகளையும் ஆசிரியர்,*

*தளையவிழி கோதைபாடித் தானமர்ந்திருப்பத் தோழி*
*விளைமதுக் கண்ணிவீணா பதியெனும் பேடி வேற்கண்*
*இளையவள் பாடவீர ரெழால்வகை தொடங்க லன்றேல்*
*வளையவ ளெழாலின் மைந்தர் பாடுக வல்லையென்றாள்.*
*வேயே திரண்மென்றோள் வில்லே கொடும்புருவம்*
*வாயே வளர்பவள மாந்தளிரே மாமேனி*
*நோயே முலை சுமப்ப தென்றார்க் கருகிருந்தார்*
*ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார்.*
*எரிமணிப்பூண் மேகலையாள் பேடியோ வென்றார்*

*பலிகொண்டு பேராத பாசமிவள் கண்*
*ஒலிகொண்டு யிருண்ணுங் கூற்றமென்று எல்லே*
*கல்கொண்டு தேவர் முலைகரந்து வைத்தார்*
*இலைகொண்ட பூணினீ ரென்றெழினி சேர்ந்தாள்*
*இலங்குபொற் கிண்கிணியா ணக்கெழினி சேர்ந்தாள்.*[9]

*முறுக்கவிழ்ந்த பூமாலை அணிந்த தத்தை அவை வணக்கம் மண்டபத்தின் கண்ணே வீற்றிருக்க, அவள் தோழியாகிய தேன் வழியும் மலர்மாலையணிந்த வீணாபதி என்னும் பேடி, தத்தை பாட அதற்கேற்றபடி வீரர்கள் யாழிசை மீட்டத் தொடங்குக, அது முடியாவிட்டால் தத்தையினைப்போல் விரைந்தாவது பாடுக என்றாள். வீணாபதி இவ்வாறு கூறவும் அங்கிருந்த மன்னர்கள், இவளது தோள்கள் மூங்கிலோ! இவளது புருவம் வில்லோ! இவளது வாய் பவளத்துண்டோ! இவளது உடல் பட்டு மாந்தளிரோ! இவளுக்கு முலை சுமத்தல் நோயோ என்று வினவினர். அங்கிருந்தவர்களும் வீணாபதிக்கு முலை காணாமையால், இவள் என்ன பேடியோ என்று ஐயம் கொண்டனர். இன்னும் சிலர் ஒளிமணிப்பூண் இழை அணிந்து வந்த தத்தையுடன் ஒரு பேடி வந்தாள், அவள் இவள் தானோ! என்றனர். உயிரைக் கொல்லுகின்றதன்மை நீங்காத யமனின் ஆயுதமாகிய கயிறு, இவள் கண்கள். இன்னும் தழைத்துப் பெருகி உயிரைக்கொள்ளை கொள்ளும் கூற்றம் என்று அஞ்சியல்லவா பிரமன் என் மார்பைக் கண்ணுக்குத் தோன்றாதபடி மறைத்து வைத்தான் என்று வீணாபதி தன் உடல் அழகு பற்றி மன்னர்களின் ஆச்சரியத்திற்கு பதிலுரைத்துவிட்டு தத்தையுடன் சேர்ந்து மறைவை அடைகின்றாள்.*

*சிங்க ஏறு போன்று சீவகன் காந்தருவதத்தையின் முன்தோன்ற, அவனைக் கண்ணென்னும் வலைக்குள் இழுத்துக்கொண்ட தத்தை அவன்மீது காதல் மையல் கொள்கின்றாள். சீவகன் மனநிறை என்னும் அருங்கதவம் திறந்து அவள் உள்ளமாகிய கன்னிமாடத்தில் நுழைந்து உயிர்வருத்த அழகால் பிணிக்கின்றான். சீவகனை அடைய விரும்பிய தத்தை தன் தோழி வீணாபதியிடம் அவனது யாழின் நுட்ப அறிவைப் பரிசோதிக்க பல வீணைகளைக் கொடுத்து அனுப்புகின்றாள். வீணாபதியும் சீவகனிடம் தத்தையின் கூற்றைத் தெரிவித்து யாழ் அறிவினைப் பரிசோதிக்கிறாள்.*

*தடங்கணாள் பணியினாற் றானவ்வீணை யொன்றினை*
*நெடுங்க ணாளெழினியை நீக்கியுய்த்து நீட்டினாள்*
*மடங்கலன்ன மொய்ம்பினான் வருகவென்று கொண்டுதன்*
*கிடந்தஞானத் தெல்லையைக் கிளக்கலுற்று நோக்கினான்.*[10]

*உள்ளடங்கிய முலையுடைய தோழியாகிய வீணாபதியிடம் கல்வி, கேள்வி மற்றும் எல்லாத் துறைகளிலும் குறைவறக்கற்றுத் தேர்ந்த சீவகன், பல்வேறு வீணைகளைப் பரிசோதித்து நரம்பிசை குறைவுடைய வீணை, வாளால் வெட்டுண்ட மரத்தால் செய்யப்பட்ட வீணை, அழுகிய மரத்தால் செய்யப்பட்ட வீணை, இடிதாக்கிய மரத்தால் செய்யப்பட்ட வீணை, வளைந்த தீய்ந்த மரத்தால் செய்யப்பட்ட வீணை என்று ஒவ்வொரு வீணைகளின் குறைகளையும் கூறினான். அழகிய உறைக்கொண்டு மூடப்பட்ட நல்யாழ் ஒன்றை வீணாபதி கொடுக்க, அதனை ஆராய்ந்த சீவகன் அழகு நலம் விளங்க வளர்த்து, பின் வாள்கொண்டு அரிந்து வரப்பட்ட மரத்தால் செய்யப்பட்டது இந்த யாழ் என்று பாராட்டுகின்றான். யாழ் நரம்பினைத் தளர்த்தி நரம்புகளுக்கிடையே இருந்த மயிரைக் காட்ட சீவகனின் இசைநுட்ப அறிவை யாவரும் வியக்கின்றனர்.*

*தன் தோழன் நபுலன் கையிலிருந்த நரம்பை வாங்கி யாழிலே பொருத்தி முறுக்கி இசை மழை பொழிகிறான் சீவகன். இசைப்பாடல் போட்டியில் காந்தருவதத்தை தோற்கின்றாள். சீவகன் மீது அவளது காதல் வெள்ளமாகப் பெருகுகின்றது. காந்தருவதத்தையின் காதல் துயர நிலையினை ஆற்றுவிக்கும் கரங்களாக வீணாபதியின் நட்பு அமைகிறது.*

## தொகுப்புரை

*மேற்கண்ட சான்றுகளின் மூலம் பண்டைக்காலத்தில் திருநங்கைகள் உயர்ந்த நிலையில் இருந்திருக்கின்றனர். அரண்மனைகளில் பெண்களைத் தவிர அரசியர்க்கு உதவுவதற்கு யாரையும் அனுமதிப்பதில்லை. இருப்பினும் திருநங்கைகளை அனுமதித்துள்ளார்கள் என்றால், அவர்களை பெண்களாக மதித்துள்ளார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால், இன்றோ சக மனிதராக கூட பார்க்க மறுக்கிறது இந்த சமூகம்.*

## மேற்கோள்கள்


1. *முனைவர் ச.வே.சு., 2015, சிலப்பதிகாரம், கங்கை புத்தக நிலையம், சென்னை.*
2. *முனைவர் ச.வே.சு., 2015, சிலப்பதிகாரம், கங்கை புத்தக நிலையம், சென்னை.*
3. *முனைவர் ச.வே.சு., 2015, சிலப்பதிகாரம், கங்கை புத்தக நிலையம், சென்னை.*
4. *முனைவர் ச.வே.சு., 2015, சிலப்பதிகாரம், கங்கை புத்தக நிலையம், சென்னை.*
5. *முனைவர் ச.வே.சு., 2015, சிலப்பதிகாரம், கங்கை புத்தக நிலையம், சென்னை.*
6. *முனைவர் ச.வே.சு., 2015, சிலப்பதிகாரம், கங்கை புத்தக நிலையம், சென்னை.*
7. *புலியூர்கேசிகன் உரை, 2017, மணிமேகலை, பாரிநிலையம், சென்னை.*
8. *புலியூர்கேசிகன் உரை, 2017, மணிமேகலை, பாரிநிலையம், சென்னை.*
9. *இ.ஜெயஸ்ரீ., 2020, திருநங்கையர் படைப்புலகம் காட்டும் வாழ்வியல், விழுப்புரம்.*
10. *இ.ஜெயஸ்ரீ., 2020, திருநங்கையர் படைப்புலகம் காட்டும் வாழ்வியல், விழுப்புரம்.*